தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-12-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## நெல்லிக்காயிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் "நெல்லிக்காயிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி" 16-12-2015 மற்றும் 17-12-2015 ஆகிய இரண்டு நாட்களில் நடைபெறும். கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சி வழங்கப்படும்.

- நெல்லி பானங்கள் - பழரச பானம் மற்றும் தயார்நிலை பானம்
- நெல்லி ஜாம், அல்வா மற்றும் பட்டர்
- கேண்டி மிட்டாய், பொடி மற்றும் துருவல்
- தொழில் தொடங்குவதற்கான உரிமம் பெற்றுக் கொள்ளுவதற்குரிய வழிமுறைகள்

ஆர்வமுள்ளவர்கள் ரூ. 1,500/- (ரூபாய் ஆயிரத்து ஐநூறு மட்டும்) செலுத்தி தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். நேரில் வந்து பெயரைப் பதிவு செய்து கொள்ள இயலாதவர்கள் பயிற்சி கட்டணத் தொகையை வரைஓலை மூலம் பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் என்ற பெயரில் கோவையிலுள்ள பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) பெறத்தக்க வகையில் (Payable at Coimbatore) எடுத்து பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். பதிவு செய்து கொள்ள இறுதி நாள் **டிசம்பர் 16, 2015.**

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள: 0422-6611340 / 6611268.**

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்